முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1520

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**27.11.2023,** திங்கட்கிழமை

1. மாதவ சூட்சும ராஜனே
   மண்ணுலகம் மீட்க வந்த குரு அரங்கனே
   பூதளத்தில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   புகலுவேன் ஞான அறிவுரை ஆசி
2. ஆசியதும் சோபகிருது தேள் திங்கள்
   (சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 11 ம் நாள், 27.11.2023, திங்கட்கிழமை)
   அரங்கனுக்கு சக்தி கூட எடுத்துரைப்பேன்
   வாசிவென்ற ஞானியர்படை
   வரம் தந்து அரங்கனோடு இணைந்திருக்க
3. இருக்கவே அரங்கன் இருக்கின்ற அறை
   இணையில்லா ஆறுமுகன் யான் வசிக்கின்ற தடமாகும்
   வகைபட அரங்கனை சூழ்ந்து
   வையகத்தில் வடிவேலன் அருள் அறம் வேலியிட்டு
4. திறம்பட வரும் மக்களுக்கு
   தொடர்ந்து அளவிலா வரம் தன்னை
   வரம் தன்னை தீட்சையாக யானே
   வருவோர்க்கு காரியசித்தி தருகின்ற வண்ணம்
5. வண்ணமுடன் ஆற்றலாய் வழங்கி வர
   வடிவேலன் யானே தரும் தீட்சை தான்
   அரங்கன் கரம்பட தருகின்ற தீட்சையாகும்
   ஆதலால் உலகோர் இந்த சூட்சுமம் அறிந்து
6. அரங்கனை இறுகப்பற்றி தொடர்பு கூட்டி
   வரம் பெற்று திங்கள் தோறும்
   வாரம் தோறும் வருடாந்திரம் தோறும்
   வையகத்தில் தொடர் தீட்சை ஆசி அடைந்துகொண்டு

7. முருகா அரங்கா என ஜெபதபங்கள்
முழங்கியே எங்கும் அன்னதான சேவை
வழங்கிவர உலகினில் தர்மபலம்
வரமாக அரங்கன் பேரில் ஆற்றல்கூடி

8. கூடியே உலகையே மாற்றுகின்ற
குறையில்லா அன்னதான மகாசக்தியாக
தேடிவந்து உலகோர் மனதுள்ளே
திருவருளாக அரங்கன் அறம் நின்று நிலைத்து

9. நிலைத்துமே ஞான யுகமாற்றத்துக்கும்
நிலையான ஞான ஆட்சிக்காலத்துக்கும்
பிழையற வழிவகை செய்தருளும்
பெருமாற்றம் உலகம் இனிதே காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–